بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 08/09/2023 அன்று ஜெர்மனியின் ஃப்ரான்க்ஃபூர்ட்டில் உள்ள பைத்துஸ் ஸுபூஹ் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

# ஜெர்மனி ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றதும், நிர்வாகம் மற்றும் பணியாளர்களுக்குப் பொன்னான அறிவுரைகளும், கலந்து கொண்ட விருந்தினர்களின் நற்தாக்கங்களும்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

அல்லாஹ்வின் மாபெரும் அருளாலும் கருணையாலும் அஹ்மதிய்யா ஜமாஅத் ஜெர்மனியின் ஆண்டு மாநாடு கடந்த வாரம் வெற்றிகரமாக நடைபெற்றது.

எல்லாவற்றிற்கும் முதலாக நாம், அல்லாஹ் நமக்கு ஓர் இடைவெளிக்குப் பிறகு, விசாலமான முறையில், இயல்பு நிலைக்கு ஏற்ப மாநாடு நடத்துவதற்கு நல்வாய்ப்பு வழங்கியதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். நிர்வாகமும் மாநாட்டில் கலந்து கொண்டவர்களும் அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்த வேண்டும். பணியாளர்களும் அல்லாஹ் அவர்களுக்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் விருந்தினர்களுக்குத் தொண்டாற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்கியதற்காக நன்றி செலுத்த வேண்டும்.

இந்த பரந்த ஏற்பாட்டில் பல இடங்களில் குறைகள் எஞ்சியிருந்திருக்கும். சில விருந்தினர்களுக்கும் சிரமும் மேற்கொள்ளப்பட வேண்டி வந்தது. ஆனால், மார்க்க நோக்கத்திற்காக வந்திருந்தார்கள். எனவே, அவர்கள் எந்த முறையீடும் செய்யவில்லை. ஆனால், சில ஏற்பாடுகள் சரியாக இருக்கவில்லை என்பது எனக்குத் தெரியவந்தது.

பணியாளர்களோ மிகக் கடினமாக உழைத்து தம்முடைய கடமைகளை நிறைவேற்றினார்கள். எங்கு அவர்களது துறையில் ஏதாவது பலவீனம் வெளிப்பட்டதோ, அவை அவர்களுடைய அதிகாரிகளின் தவறான வழிகாட்டல்கள் காரணமாக வெளிப்பட்டன. விருந்தினர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்ட இடங்களில் அதிகாரிகள் பொறுப்பாளர்கள் ஆவார்கள். இஸ்திஃக்ஃபார் செய்ய வேண்டும். இனிவரும் காலத்திற்காக **Redbook** இல் எழுதி சீர்திருத்தத்திற்கு முயற்சி செய்ய வேண்டும்.

**Lift** வேலை செய்யவில்லை. குளியலறைகளின் பற்றாக்குறை அதிகம் இருந்தது. தண்ணீர்க்கான ஏற்பாடு சரியாக இருக்கவில்லை. பாதுகாப்புப்

பணியாளர்கள் தேவையின்றி தடைகளை ஏற்படுத்தி வந்தார்கள். மொழியாக்கத்திலும் சிரமத்தை எதிர்கொள்ள வேண்டி வந்தது. ஒலிப்பிரச்சனையும் இருந்தது. எங்களால் குத்பா கேட்க முடியவில்லை என்று சில விருந்தினர்கள் முறையிட்டார்கள்.

மாநாடு நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதும் நான் நிர்வாகத்திற்கு கவனமூட்டி வந்தேன். மாநாட்டின் அதிகாரிகள், மாநாட்டுத் திடலின் அதிகாரி மற்றும் ஒலித்துறையின் பொறுப்பாளர் ஆகியோர் இதற்குப் பொறுப்பாளர்கள் ஆவார்கள். மக்கள் இங்கு மாநாடு கேட்பதற்காக வருகிறார்கள். அதை அவர்களை சரியாகக் கேட்க வைப்பதற்கான ஏற்பாடு இல்லையென்றால் பிறகு மாநாட்டால் என்ன பயன்? மற்ற ஏற்பாடுகளில் குறைகள் பொறுத்துக் கொள்ளப்படுகின்றன. ஆனால், மாநாடு கேட்பதற்கான ஏற்பாடுகளில் எந்தக் குறையையும் பொறுத்துக் கொள்ளப்பட முடியாது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், 'இது மக்கள் ஒன்று கூடிவிடக்கூடிய திருவிழா ஒன்றும் அல்ல' என்று கூறியுள்ளார்கள்.**

ஓசை கேட்காததனால் பின்பக்கம் சில இடங்களில் திருவிழா நிலைதான் இருந்தது. எனது கணிப்புப்படி, குறைந்தது ஏழு, எட்டு ஆயிரம் பேர் மாநாட்டை சரியாக கேட்காதவர்களாக இருப்பார்கள்.

நிர்வாகம் மக்களைப் பொறுப்பாளிகளாக ஆக்குகிறது. மக்கள் பேசிக் கொண்டிருந்தார்கள் என்றால், தர்பிய்யத் குறைபாடுதான். மிஷனரீ இன்சார்ஜ்மார்களும் முரப்பிமார்களும் இதற்குப் பொறுப்பாளிகள் ஆவார்கள். அவர்கள் ஏன் ஆண்டு முழுவதும் தர்பிய்யத் வழங்குவதில்லை. மக்களைக் குறைகூறாதீர்கள். ஓர் அஹ்மதிக்கு கவனமூட்டப்பட்டால் பொதுவாக நல்ல எதிர்நடவடிக்கையைத் தான் வெளிப்படுத்துவார்.

இம்முறை ஆண்களைக் காட்டிலும் பெண்களிடத்தில் அதிகம் ஒழுக்கம் இருந்தது. ஆண்களின் தர்பிய்யத் துறை தன்னைப் பற்றி கவலைப்பட வேண்டும். முன்னேற்றமடையக்கூடிய சமுதாயங்கள் தம்முடைய பலவீனங்கள் மீது கண் வைத்தால்தான் வெற்றி பெரும். எல்லாம் நன்றாகத்தான் இருந்தது என்று கூறி முன்னேற்றத்தின் வழிகளை அடைக்காதீர்கள். இதில் வெட்கப் படுவதற்கும் ஒன்றுமில்லை. அல்லாஹ் துறைகளின் அதிகாரிகளுக்குத் தம்மை சீர்திருத்திக் கொள்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக!

இந்தக் எல்லாக் குறைகளும் இருந்தும், அல்லாஹ் நம்முடைய குறைகளைத் திரையிட்டு நம்மீது பேரருள் புரிந்துள்ளான். மாநாட்டில் வந்திருந்த விருந்தினர்கள் பொதுவாக மிக நல்ல தாக்கத்தைப் பெற்றுள்ளார்கள். விருந்தினர்கள் அசாதாரணமான தாக்கங்களை வழங்கியுள்ளார்கள். அல்லாஹ் இந்த மாநாடு காரணமாக மக்களுக்கு இஸ்லாத்தின் உண்மையான போதனையை முன்வைப்பதற்கான நல்வாய்ப்பு வழங்கியதற்காக ஜெர்மனி ஜமாஅத் அல்லாஹ்வுக்கு அதிகம் நன்றி செலுத்த வேண்டும்.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் விருந்தினர்களின் நற்தாக்கங்களை எடுத்துரைத்தவாறு கூறினார்கள்:*

**பல்காரியாவின் ஒரு கிறிஸ்தவ பெண்மணி வீரோனேக்கா சாஹிபா** ஆவார். அவர் வக்கீலும், PhD டாக்டரும், பல்கலைக்கழகப் பேராசிரியரும் ஆவார். அவர் கூறுகிறார்: மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்ட மாநாடு நடைபெற்றது. எந்த முகத்திலும் பதற்றத்தையோ கோபத்தையோ காணவில்லை. இந்த நிகழ்ச்சி என்னை ஆன்மிக ரீதியில் மீட்டெடுத்தது.

**பல்காரியாவின் இன்னொரு கிறிஸ்தவ பெண்மணி நத்தாலியா சாஹிபா** கூறுகிறார்: இந்த மாநாடு எனது சிந்தனையில் பதிந்திருக்கும். முதன்முறை ஆயிரக்கணக்கான முஸ்லிம்களை ஒன்றாக இறைவணக்கம் செய்யக் கண்டுள்ளேன். எல்லாரும் மகிழ்ச்சியுடன் நடந்து கொண்டார்கள். கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் உரை மிகவும் தாக்கம் ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது.

**மக்தூனியாவின் ஒரு கிறிஸ்தவ பெண் எழுத்தாளர்** கூறுகிறார்: ஆண்டு மாநாட்டின் அமைப்பு மிக உயரிய மட்டத்தில் இருந்தது. பல மார்க்கங்கள் மற்றும் சமுதாயங்களின் மக்கள் கலந்து கொண்ட, இவ்வளவு பெரிய ஒரு மாநாட்டில் பங்கேற்றது எனக்குப் பெரும் கண்ணியமாகும்.

**மக்தூனியாவையே சேர்ந்த மற்றோர் எழுத்தாளர்** கூறுகிறார்: கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் பல்வேறு தலைப்புகளில் ஆற்றிய சொற்பொழிவுகள் என்னை மிகவும் தாக்கத்திற்கு உள்ளாக்கின. பல அஹ்மதி முஸ்லிம்களுடன் உரையாடும் வாய்ப்பு கிடைத்தது. மிகவும் அன்போடும் புன்சிரித்தவாறும் உரையாடி வந்தார்கள். 'எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் இல்லை வெறுப்பு' என்பதன் செயல் முன்மாதிரியைக் கண்டேன். இந்தக் குறிக்கோளின் மூலமே உலகில் அமைதி நிலபெற முடியும்.

**சில்வாக்கியாவைச் சேர்ந்த ஓர் ஆசிரியை மார்ட்டினா சாஹிபா** கூறுகிறார்: விருந்தோம்பலின் இப்படிப்பட்ட முன்மாதிரியை ஒருபோதும் கண்டதில்லை. பைஅத் மற்றும் தொழுகையின் போது, என்னால் என்னுடைய உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

**சில்வாக்கியாவைச் சேர்ந்த இன்னொரு விருந்தினர்** கூறுகிறார்: மாநாட்டிற்கு முன்பு இஸ்லாத்தைப் பற்றி எதுவும் தெரியாது. மாநாட்டில் கலந்து கொண்டு எனக்கு அல்லாஹ் மற்றும் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய அந்தஸ்தைப் பற்றி தெரியவந்தது. அஹ்மதிகள் அதிக ஈடுபாட்டுடனும், பெரும் உத்வேதகத்துடனும் விருந்தாளிகளுக்குத் தொண்டாற்றினார்கள்.

**சில்வாக்கியாவையே சேர்ந்த இன்னொரு விருந்தினர்** கூறுகிறார்: அஹ்மதிகளுடைய நல்லொழுக்கங்களும் விருந்தோம்பலும் என்னைப் பெரிதும் தாக்கத்திற்கு உள்ளாக்கியது. அஹ்மதிகள் தங்களுடைய மார்க்கத்தின்படி செயல்படுபவர்கள் ஆவார்கள்.

**அல்பானியாவின் ஒரு விருந்தினர், முனைவர், பேராசிரியர்.** அவர் கூறுகிறார்: மாநாடு மிகவும் மகத்துவமிக்கதாக இருந்தது. கிலாஃபத்தே உங்களுடைய ஒற்றுமைக்குக் காரணம் என்பதை இந்த மாநாட்டில் கண்டேன்.

**போஸ்னியாவில் இருந்து வரலாற்றுப் பாடத்தின் பேராசிரியர் ஹாரிஸ் சாஹிப்** கூறுகிறார்: மாநாட்டில் ஒவ்வொன்றுக்கும் திட்டம் வகுக்கப்பட்டிருந்தது. மிக நல்ல ஏற்பாடு இருந்தது. கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் முதல் சொற்பொழிவால் எனது சிந்தனை தெளிவு பெற்று விட்டது. எனக்கு பெரும் நிம்மதி கிடைத்தது.

**போஸ்னியாவில் இருந்து ரெட் கிராஸின் செயலர் இந்திரா ஹைதர் சாஹிபா** கூறுகிறார். கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடனான சந்திப்பு மிகவும் மகிழ்ச்சிகரமாக இருந்தது. கிலாஃபத் உலகம் முழுவதிலும் உள்ள அஹ்மதிகளை ஒரே சரடில் கோர்த்துள்ளது. நான் முஸ்லிமாக இருப்பதைப் பெருமையாக உணர்ந்தேன்.

**ஜார்ஜியாவைச் சேர்ந்த ஒரு பெண்மணி** கூறுகிறார்: முதல்முறை மாநாட்டைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது. சிறியவர்களும் பெரியவர்களும் சிறப்பான ஆர்வத்துடன் பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். உலகளாவிய பைஅத்தைக் கண்டு உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துவது சிரமமாக இருந்தது. ஜமாஅத்தின் கலீஃபா அவர்கள் எழுதுகோலால் செய்யப்படும் போர் பற்றிய கண்ணோட்டத்தை நம் முன் வைத்தார்கள். நான் இதை நூறு சதவீதம் ஆமோதிக்கிறேன். வருங்காலத்தில் உலகம் இஸ்லாத்தைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கும் என்றும், அதன் மூலமாக (மக்கள்) இறைவனை அடையாளம் காணக்கூடியவர்களாக ஆவார்கள் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன்.

**ஜார்ஜியாவில் இருந்து ஒரு சுன்னீ அறிஞர்** கூறுகிறார்: நான் கிறிஸ்தவத்தை விட்டுவிட்டு இஸ்லாத்தை ஏற்றேன். மதீனா முனவ்வராவில் வாழ்ந்தேன். அஹ்மதிகள் எங்களைக் காஃபிர்கள் என்று கூறுவதாகவும், அவர்களின் கொள்கை மாறுபட்டது என்றும் கேள்விப்பட்டேன். மாநாட்டில் ஜமாஅத்தை அருகிலிருந்து பார்த்தேன். கலீஃபா அவர்கள் ஆற்றிய சொற்பொழிவுகளை கவனமாகக் கேட்டேன். உங்களைக் காஃபிர்கள் என்று கூறுவது தவறாகும். மாநாட்டின் மூன்று நாள்களில் என்னுடைய அனைத்துக் கேள்விகளுக்கும் பதில்கள் கிடைத்தன.

**குஸோவோவில் இருந்து வந்திருந்த கல்வி இயக்குனர்** கூறுகிறார்: மாநாட்டின் நாள்களில் நான் சொற்பொழிவுகளைக் கேட்டேன். அவை எனது நினைவில் பதிந்திருக்கும். அனுபவித்த விருந்தோம்பல் எங்களுடைய உள்ளங்களில் என்றென்றும் இருக்கும்.

**குஸோவோவின் மேயர்** கூறுகிறார்: இந்த அசாதாரணமான மாநாட்டில் ஒற்றுமை மற்றும் சகோதரத்துவத்தின் காட்சியானது எனது சிந்தனையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் உரை தாக்கம் ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. விருந்தோம்பல் வியப்பூட்டக்கூடியதாக இருந்தது.

**கேம்ரூனின் ஒரு சீஃப் இமாம்** கூறுகிறார்: இவ்வளவு பெரிய நிகழ்ச்சியில் முதல்முறை கலந்து கொண்டேன். பல்வேறு நிறங்களை உடைய மக்கள் ஒரு குடும்ப உறுப்பினர்களைப் போன்று சந்தித்துக் கொண்டது வியப்பிற்குரியதாக

இருந்தது. ஜமாஅத்தின் இமாம் அவர்களின் சொற்பொழிவுகள் நுட்பமானவையாகவும், இஸ்லாமிய போதனைகளைப் பிரதிபலிப்பவையாகவும் இருந்தன. நாம் இதன்படி அமல் செய்தால், வாழ்வு சொர்க்கமாகி விடும்.

**லித்வானியாவைச் சேர்ந்த ஒரு பெண்மணி** வந்திருந்தார். அவர் தன்னார்வத்துடன் **'இஸ்லாமீ உஸூல் கீ ஃபிலாஃபீ'** (இஸ்லாமிய போதனைகளின் தத்துவ ஞானம்) எனும் நூலை லித்வேனியன் மொழியில் மொழிபெயர்த்தவர் ஆவார். அவர் கூறுகிறார்: நான் அஹ்மதிய்யா ஜமாஅத்தை சோதித்து அறிவதற்கு ஆண்டுமாநாடு எனக்கு நல்லவொரு சந்தர்ப்பத்தை வழங்கியது. அஹ்மதிய்யா ஜமாஅத் தனது குறிக்கோள்படி உண்மையான முறையில் அமல் செய்கிறது.

**துருக்கியைச் சேர்ந்த ஓர் ஆசிரியை யாஸ்மீன் சாஹிபா,** ஜெர்மனியில் வசிப்பவர் ஆவார். அவர் கூறுகிறார்: கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் சொற்பொழிவு என்னுடைய கேள்விகளுக்கு பதிலாக அமைந்தது. மாநாட்டின் சூழல் எனக்கு மிகவும் பிடித்து விட்டது. இவ்வளவு அதிகமான மக்கள் ஒன்றுகூடுவதும் அன்பின் சரடில் கோர்க்கப்பட்டிருப்பதும், ஓர் அசாதாரணமான மற்றும் வியக்க வைக்கும் விஷயமாக இருந்தது.

**சர்பியாவின் ஒரு பத்திரிக்கையாளர்** கூறுகிறார்: மாநாட்டில் உங்களுடைய அழகான ஏற்பாடு என்னை வியக்க வைத்து விட்டது. நிர்வாகத்திலோ, 46 ஆயிரம் மக்களிலோ எந்தத் தீமையும் தென்படவில்லை.

**சர்பியாவின் இன்னொரு பெண் பத்திரிக்கையாளர்** கூறுகிறார்: எனது உள்ளத்தில் ஏற்பாட்டாளர்கள் மற்றும் கலந்து கொண்டவர்களுக்காக அன்பின் உணர்வுகள் உள்ளன. கலீஃபா அவர்கள் லஜ்னாவின் பக்கம் ஆற்றிய உரை மிகவும் தாக்கத்திற்கு உள்ளாக்கியது.

**ஒரு ஜெர்மனி கிறிஸ்தவர் கத்தோலிய டீவியின் பிரதிநிதி** கூறுகிறார்: கலீஃபா அவர்களின் சொற்பொழிவு தாக்கம் ஏற்படுத்தக்கூடியதாக இருந்தது. சொற்பொழிவு எப்படியிருந்ததெனில், கேட்டுவிடுவது மட்டும் போதுமானதல்ல.

**ஒரு ஜெர்மனி பெண்மணி** மாநாட்டில் மரியாதைக்காக துப்பட்டாவைத் தலையில் போர்த்தி அமர்ந்திருந்தார். அவர் கூறுகிறார்: சொற்பொழிவின் போது, எனது உள்ளத்தில் எந்த அளவு தாக்கம் ஏற்பட்டது என்றால், என் கண்கள் குளமாகி விட்டன. கலீஃபா அவர்கள் கூறிய விஷயங்கள் மனதைத் தொடக்கூடியவையாக இருந்தன.

**ஜெர்மனி ஆண்டுமாநாட்டில் மீடியா கவரேஜ்** நன்றாக இருந்தது. நான்கு தொலைக்காட்சி சேனல்கள் மூலமாக 41 மில்லியன் மக்கள் வரையும், 11 பத்திரிகைகள் மூலமாக 50 மில்லியன் மக்கள் வரையும், 5 வானொலி நிலையங்கள் மூலமாக 14 மில்லியன் மக்கள் வரையயும், ஆன்லைன் மூலமாக 2 மில்லியன் மக்கள் வரை செய்தி சென்றடைந்தது. இவர்களின் கருத்துப் படி, இவ்வாறு 108 மில்லியன் மக்கள் வரை மாநாட்டின் கவரேஜ் சென்றடைந்தது.

எவ்வாறாயினும், அல்லாஹ் இதற்கான சிறந்த விளைவுகளையும் உருவாக்குவானாக! நான் மக்களின் ஒரு சில தாக்கங்களை எடுத்துரைத்தேன். அல்லாஹ் நமது குறைகளைத் திரையிடுகிறான். (இது) அவன் நம்மீது புரியும் பேரருளாகும். நாம் அதற்கு நன்றி செலுத்த வேண்டும்.

பல்வேறு பள்ளிவாசல்கள் திறக்கப்பட்ட போதும், இஸ்லாம் பற்றிய எங்களது கருத்து மாறி விட்டது என்று மக்கள் நேர்மறையான தாக்கத்தை வெளிப்படுத்தியுள்ளார்கள். எங்களுக்குப் பரிட்சயமான அஹ்மதிகள் எங்களுக்கு இஸ்லாத்தின் அழகான போதனைகளை இதற்குமுன் தெரியப்படுத்தவில்லை என்றும் முறையிடவும் செய்துள்ளார்கள்.

எனவே, ஒவ்வோர் அஹ்மதியும் தாழ்வு மனப்பான்மையின்றி, இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களைப் பற்றி அறிமுகம் செய்து வைக்க வேண்டும். **Pamphlet** விநியோகம் செய்வது மட்டும் நோக்கத்தை நிறைவேற்றுவதில்லை. மக்களுக்கு இப்போதும் மார்க்க விஷயங்களைக் கேட்பதில் ஈடுபாடு உள்ளது.

நாம் எல்லா இடத்திலும் நம்மை சுயஆய்வு செய்ய வேண்டிய தேவையுள்ளது. பலவீனங்களில் கவனம் செலுத்த வேண்டும். அதிகம் மேம்படுத்த இடமுள்ளது. நாம் சிறந்ததிலும் சிறந்தவற்றைத் தேட வேண்டும். துஆ செய்து அல்லாஹ்விடம் உதவி கோரியவாறு பணியைத் துவங்குங்கள். நிர்வாகமும் கலந்து கொண்டவர்களும் எப்பொழுதும் மாநாட்டின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு முழு முயற்சி செய்ய வேண்டும்.

அல்லாஹ் நம்மீது கருணை புரிவானாக! இனி அனைவருக்கும் சிறந்த முறையில் மாநாட்டின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ
يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ
يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)